பதிவு எண்: ம. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: சித்திரை 3 (15–4–68) திங்கள் ★ வெளியூர்: சித்திரை 4 (16–4–68) செவ்வாய் [இதழ்: 252

பகற் கனவு!

"மதுவிலக்கை ரத்து செய்துவிட்டால், கள்ள மது காய்ச்சுவது குறைந்துவிடும் என்று சொல்லுகிறார்கள்; இது, பகற் கனவேயாகும்!

"மதுவிலக்கு அமலில் உள்ள இடங்களைவிட, மதுபானங்கள் அமலில் உள்ள இடங்களில் தான் கள்ளச் சாராயம் காய்ச்சுவது அதிகம்!"

—டாக்டர் ஜீவராஜ் மேத்தா
(மதுவிலக்கு மாநாட்டில்)

அண்ணா அமெரிக்கப் பயணம்

தலைநகரில் உளங்கனிந்த வழியனுப்பு

விடை பெறுமுன் நாட்டுக்கு வழங்கிய நல்லுறுதி

சென்னை, ஏப். 15—

"இந்தியாவைத் தாழ்த்திவிட்டு இந்தியாவில் உள்ள ஒருவன் உயர முடியாது. அதிலும், பல விஷயங்களில் மிகவும் ஜாக்கிரதையாக உள்ள நான், அமெரிக்காவில் இந்தியாவின் நிலைமைகளை எடுத்துக்கூறுவதிலும் கண்ணும் கருத்துமாயிருப்பேன்.

"இப்போது மத்தியில் ஆளுங் கட்சியிடத்தில் குறைகள் இருக்கின்றதென்றோ, எங்கள் கட்சியில் குறைகளே இல்லை என்றோ கூறப்படும் பேச்சுகளில் இறங்க மாட்டேன். இந்தியாவுக்குப் பொதுவான பிரச்சினைகளை—அதுவும் இந்திய நாட்டிற்குப் பலன் தரும் பிரச்சினைகளை எடுத்து விளக்குவேன்.

"அமெரிக்கா செல்வத்திலும் மற்ற எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடைந்துள்ள வல்லரசாகும். ஆனால் அந்தப் பொருளாதார வளத்தைக் கண்டு மயங்கிவிட மாட்டேன்.

"தமிழகத்தைப் பொறுத்தவரை, 'தூரக்கிழக்கு நாடுகளுடன் நமது முன்னோர் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தார்கள்; இன்று நாம் எவ்வளவு பின்தங்கியிருக்கிறோம்'—என்பதற்கான வரலாற்று விவரங்களை எடுத்துக்காட்ட முயல்வேன்.

"அமெரிக்கர்களுக்கு வரலாறு நன்கு புரியும்; எனவே அந்த அடிப்படையில் அமெரிக்காவின் உதவிகளைக் கேட்பேன். கடந்த ஆண்டுகளில் இந்தியா அடைந்துள்ள முன்னேற்றத்தையும் எடுத்துக்கூறுவேன். நான் அவற்றைச் சொல்லாமல் விட்டுவிடுவேன் என்று காங்கிரசுத் தோழர்கள் ஐயப்பட வேண்டாம்.

"இந்தியா அடைந்துள்ள முன்னேற்றத்தை எடுத்துச்சொன்னால்தான், 'இன்னும் அதை இன்னின்ன நிலையில் செய்திருந்தால் மேலும் அதிக முன்னேற்றம் அடைந்திருக்கலாம்' என்பதை அவர்களுக்கு விளக்கிடவும், அதன் வாயிலாக நாம் உதவிகளைப் பெறவும் வாய்ப்பு ஏற்படும் என்று நம்புகிறேன்"

என்று, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் நேற்று தமக்கு நடத்தப்பட்ட வழியனுப்பு விழாவில் நன்றியுரைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

மேலைநாட்டுச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் அண்ணா அவர்களை வழியனுப்பும் வகையில் தமிழக அமைச்சரவை சார்பில் இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மவுண்ட்ரோடு அரசினர் தோட்டத்தில் இராஜாஜி மண்டபத் திறந்த வெளியில் நேற்று மாலை 4 மணியளவில் இந்த விழா நடைபெற்றது. விழாவுக்குத் தலைமையேற்று நடத்திக்கொடுக்குமாறு ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அவர்களை அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் கேட்டுக்கொண்டார்; சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள் தலைமையேற்று, அண்ணா அவர்களின் அமெரிக்கப் பயணம் வெற்றிகரமாக முடியவும், அதன் மூலம் நம் நாட்டின் புகழ் ஓங்கவும் வாழ்த்துவதாகக் கூறினார்.

அடுத்து, சட்டமன்ற மேலவைத் தலைவர் மாணிக்கவேலர், சட்டப் பேரவைத் தலைவர் சி.பா. ஆதித்தனார், மேலவை எதிர்க் கட்சித் தலைவர் இராசாராம் நாயுடு, திரு. ம.பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., காயிதே மில்லத் முகமது இசுமாயில் எம்.பி. ஆகியோர் வழியனுப்புரையாற்றினர்.

பாராட்டுக்கு நன்றி தெரிவித்து அண்ணா அவர்கள் பேசியபின், அமைச்சர் கருணாநிதி அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

அனுபவத்தை நடைமுறையில் கொண்டுவந்தால்....!

அண்ணா அவர்கள், தமது நன்றியுரையில் மேலும் குறிப்பிட்டதாவது:

"முன்பெல்லாம் நாம் வெளிநாடுகளுக்குப் போவதென்றால் அது மிகவும் அரிதாகவும் சிரமமான காரியமாகவும் இருந்துவந்தது. இப்போது எளிதாகச் செல்லக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

ஓரிருவர் வெளிநாடு சென்று அங்கிருந்து திரட்டிவரும் அறிவு அல்லது அனுபவத்தால் மட்டும் முழுப் பயன் ஏற்பட்டுவிடாது; ஆனால், அனைவரும் ஒன்றுபட்டு அந்த அனுபவத்தை நடைமுறையில் கொண்டுவரப் பாடுபட்டால் அதன் முழுப் பயனை நாடு பெறமுடியும்.

நமது சட்டமன்ற மேலவைத் தலைவர் மாணிக்கவேலர் பேசுகையில், 'அமெரிக்கச் சுற்றுப்பயண'த்தை முடித்துக்கொண்டு



இனிதே தாயகம் திரும்பவேண்டும்; அது, ஆடம்பரம் செல்வாக்கு மிகுந்த நாடு' என்று சொன்னார்கள்.

ஐம்பத்தொன்பது வயதைக் கடந்துவிட்ட நான், அவ்விடமுள்ள பளபளப்பைக் கண்டு மயங்கிவிடமாட்டேன்!

எனது நண்பர் ம.பொ.சி. பேசுகையில், 'இந்தியாவும், அமெரிக்காவிற்குச் சிலவற்றை வழங்கும் வளத்தைப் பெற்றிருக்கிறது' என்று குறிப்பிட்டார்.

அதற்கேற்ப, இந்தியாவில்—தமிழ்நாட்டின் சிறந்த கலாச்சாரப் பண்பாட்டுப் பெருமையையும் மற்ற சிறப்பினையும் அமெரிக்காவில் எடுத்துக்கூறுவேன்!

நான், அமெரிக்கப் பயணத்தை மேற்கொள்ளத் திட்டம் வகுத்தபோது, இந்திய அரசின் வெளிநாட்டுக் கொள்கையை தி. மு. கழகம் ஏற்கனவே ஆதரித்துவருகிறதென்பதைத் தெரிவித்து, அத்துடன் மேலும் வெளிநாடுகளுக்கு அதனை எடுத்து விளக்க, தலைமையமைச்சர் இந்திரா காந்தியிடம் விவரம் கேட்டிருந்தேன்; அதற்கு அவர்களும் விவரம் அனுப்பியிருக்கிறார்கள்; அவைகளையும் வைத்துக்கொண்டு, இந்தியாவின் புகழும், நல்லெண்ணமும் ஒளிவீசும் வகையில் எடுத்துக்கூறுவேன்.

திரு. இராஜாராம் நாயுடு என்னைப் பாராட்டிப் பேசும்போது, 'நீங்கள் சஞ்சலமின்றி அமெரிக்கப் பயணத்தை மேற்கொண்டு திரும்பி வாருங்கள்; உங்கள் தம்பிமார்கள் நீங்கள் இட்டுச் செல்லும் கட்டளைப்படி ஆட்சியை நடத்துவார்கள்; அதற்கு, எதிர்க்கட்சியினராகிய நாங்களும், மற்ற கட்சிகளும் துணை நிற்போம்' என்று கூறினார்; இதற்காக நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

திரு. இராஜாராம் நாயுடு இவ்வாறு கூறியபோது, அவர் பக்கத்தில் திரு. விநாயகம் அவர்களும் இருக்கிறார் என்பதை நான் சுட்டிக் காட்டுகிறேன் (சிரிப்பு). இதை அவர்கள் எனக்களிக்கும் உத்தரவாதமாகக் கருதுகிறேன்.

அமெரிக்காவில் 60 அடுக்கு மாடி ஓட்டல் அமைத்திருப்பதாகச் சொன்னார்கள்; அதைப் பார்த்துவிட்டு, 'இங்கும் ஒன்று அமைக்கவேண்டும்' என்று ஆசைப்படமாட்டேன்; அப்படி ஆசைப்பட்டால், குழந்தைகள் சினிமாவைப் பார்த்துவிட்டு அதில் காண்பனவற்றைக் கேட்பது போல ஆகிவிடும்!

(4-ம் பக்கம் பார்க்க)

பம்பாயில் அறிஞர் அண்ணா

அண்ணா அவர்கள் இன்று மாலை 4-20 மணிக்கு பம்பாய் போய்ச் சேருகிறார்கள்; அங்கே சாந்தா குரூஸ் விமான நிலையத்தில், பம்பாய் தி.மு.க. சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுகிறது.

மாலை 6 30 மணிக்கு, பம்பாய் மாதுங்கா இந்தியன் ஜிம்கானா திடலில், மாபெரும் வழியனுப்பு விழா நடைபெறும்.

தோழர் தொ. து. அன்புச்செழியன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில், தோழர்: பொ. அப்பாதுரை, மற்றும் கழகத் தோழர்கள் பலரும் வழியனுப்பு உரையாற்றுவார்கள்,

பின்னர், நாளை விடியற்காலை 2-15 மணிக்கு பம்பாயிலிருந்து விமான மூலம் புறப்பட்டு, இத்தாலி நாட்டுத் தலைநகரான ரோமுக்குச் செல்கிறார்கள்; அங்கிருந்து நாளை மறுநாள் பிரான்சுக்குப் பயணமாகிறார்கள்; ஏப். 19-ஆம் நாள் பாரிஸ் நகரிலிருந்து புறப்பட்டு அமெரிக்காவை அடைவார்கள்.

அண்ணா அவர்களுடன், செயலாளர் திரு. சொக்கலிங்கமும் செல்கிறார்.

அண்ணா புறப்பாடு

சென்னை, ஏப். 15—

அமெரிக்கச் சுற்றுப்பயணத்தை முன்னிட்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் இன்று பிற்பகல், மீனம்பாக்கம் விமானநிலையத்திலிருந்து பம்பாய்க்குப் புறப்பட்டார்கள்.

விமானநிலையத்தின் உள்ளும் வெளியேயும், வழிநெடுகிலும் பல்லாயிரக்கணக்கானவர்கள் குழுமியிருந்து, வாழ்த்தொலி முழங்கி, மலர் மாலைகள் அணிவித்துச் சிறப்பான முறையில் வழியனுப்பி வைத்தனர்.

மீனம்பாக்கம் விமானநிலையம் இதுவரை கண்டிராத அளவுக்கு, இந்த வழியனுப்பு விழா சிறப்பாக அமைந்தது.

தமிழக அமைச்சர்கள், மேயர், துணை மேயர், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழக அரசின் உயர்தர அதிகாரிகள், கழக முன்னணித் தோழர்கள், மற்றும் பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் ஆகிய பலரும் மாலையணிவித்து வழியனுப்பினர்.

அண்ணா அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து, மகிழ்ச்சியிலே திளைத்தவாறு விடைபெற்றுக்கொண்டு விமானத்திலே ஏறினார்கள்.

தமிழ்நாட்டுக்குக் கிடைத்த பெரும்பேறு

"தமிழகத்தின் ஆளும் கட்சித் தலைவராகவும், மத்திய அரசைப் பொறுத்தவரையில், எதிர்க் கட்சித் தலைவராகவும் நீங்கள் அயல்நாட்டுச் சுற்றுப் பயணத்தை மேற்கொள்வதில் மிகப் பெருமையடைகிறோம்.

"நாடு விடுதலை பெற்ற காலத்திலிருந்து இதுவரையில் எவருக்கும் கிடைக்காத நல்வாய்ப்பு தங்களுக்குக் கிடைத்திருக்கிறது. எந்த மாநில முதலமைச்சருக்கும் கிடைக்காத பெரும்பேறு தங்களுக்குக் கிடைத்திருப்பது, தமிழகத்துக்குக் கிடைத்த தனிப் பேருகும்!

"முதலமைச்சர் அவர்களே! நீங்கள் செல்லுமிடமெல்லாம் சிறப்புப் பெற்று, வெற்றியோடு திரும்பிவர வாழ்த்துகிறேன்.

"சஞ்சலமேதுமின்றி, அயல்நாட்டுச் சுற்றுப்பயணத்தை வெற்றிகரமாக முடித்துவிட்டுத் திரும்பிவாருங்கள்; உங்கள் தம்பிமார்கள், நீங்கள் இட்டுச் செல்லும் கட்டளைப்படி ஆட்சியை நடத்துவார்கள்; அதற்கு எதிர்க்கட்சியினராகிய நாங்களும், மற்ற கட்சிகளும் துணை நிற்போம்!

"தமிழ்நாட்டின் பெருமையை அமெரிக்காவில் எடுத்துக்கூற, தங்களைத் தவிர வேறு யாரும் இல்லை!"

—கே. இராஜாராம் நாயுடு
(அண்ணா வழியனுப்பு விழாவில்)

வருமானமல்ல—குடும்பங்களின் மகிழ்ச்சிதான் அரசுக்கு முக்கியம்

மதுவிலக்குச் சட்டத்தை உறுதியுடன் அமுலாக்குவோம்

புதியதோர் தலைமுறையை உருவாக்கி வெற்றி காண்போம்

அனைத்திந்திய மதுவிலக்கு மாநாட்டில் முதலமைச்சர் அண்ணா உறுதி

சென்னை, ஏப். 15—

"மதுவிலக்குக் காரணமாக, 'குடித்துவிட்டு ரகளை செய்வதை'க் காணாத புதிய தலைமுறையை இப்போது நாம் காண்கிறோம்! 'ஒரு சிலர் திருட்டுத்தனமாகக் குடிக்கிறார்கள்' என்பதற்காக—'ஒரு சிலர் மதுவிலக்குச் சட்டத்தை மீறுகிறார்கள்' என்பதற்காக எந்த நாகரிக அரசும் மதுவிலக்குத் திட்டத்தை எடுத்துவிடாது!

"மதுவிலக்குச் சட்ட மீறல் குற்றங்களைப் பார்த்து, 'அந்தத் திட்டம் தோல்வியடைந்துவிட்டது; ஆகவே, ரத்து செய்துவிடவேண்டும்' என்றால் ஏற்றுக்கொள்ள இயலாது; 'இன்னும் வலுவான முறையில் மதுவிலக்குத் திட்டம் அமல் செய்யப்படவேண்டும்' எனபதன் அவசியத்தையே அது வற்புறுத்துகிறது!

"மதுவிலக்கை ரத்து செய்ததன் காரணமாக மைசூருக்கு ரூ. 11 கோடி வருமானம் கிடைக்கும்' என்று கருநாடக மாநில அமைச்சர் ஒருவர் கூறியிருக்கிறார்; நிதிப் பற்றுக்குறையால் அவதியுறும் இந்த மாநிலத்தின் பொறுப்பை ஏற்றிருக்கும் எனக்குக்கூட, 'ரூ. 11-கோடி வருமானம்' என்பது மிகுந்த 'வசீகரமாக'த்தான் இருந்தது; ஆனால், அடுத்த நிமிடமே—மதுவிலக்கை ரத்து செய்துவிடுவதன் விளைவாக—

கண்ணீர் வடிக்கும் தாய்மார்களின் முகங்களும், அழுது கதறும் குழந்தைகளின் உருவங்களும், நலிந்துவிட்ட குடும்பங்களும்

என்னுடைய மனக் கண்முன் காட்சியளித்தன; சிறிதுநேரம் சிந்தித்தேன்; இந்த 'வசீகர'மான ரூ. 11-கோடிக்கு 'விடை கொடுத்து' விட்டேன்! அந்த ரூ. 11-கோடி வருமானத்தைவிட, தாய்மார்களின் மகிழ்ச்சி—திருந்திய குடும்பங்கள்தான் தமிழக அரசுக்கு முக்கியம்; 'இதற்கு எதிராக இந்த வருமானம், எந்த வகையிலும் ஈடல்ல' என்று முடிவுகட்டினேன்; ஆகவே, மதுவிலக்குச் சட்டத்தில் இருக்கும் ஓட்டைகளை மூடி—திட்டத்தை இன்னும் உறுதியாக அமுலாக்கி—அத்துறையில் வெற்றிகாண முனைவோம்"

என்று, முதலமைச்சர் அண்ணா அவர்கள், ஏப். 12-ம் நாளன்று பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில், நான்காவது அனைத்திந்திய மதுவிலக்கு மாநாட்டைத் துவக்கிவைத்துப் பேசுகையில், தெள்ளத் தெளிவுற விளக்கித் திட்டவட்டமாக அறிவித்தார்.

மாநாட்டிற்கு டாக்டர் சுசிலா நய்யார் தலைமை தாங்கினார்.

மாநகராட்சி மேயர் அபிபுல்லா பேக் அனைவரையும் வரவேற்றார்.

மாநாட்டிற்கு, இந்தியத் துணைக் கண்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் பிரதிநிதிகள் (மகளிர் உட்பட) வந்து கலந்து கொண்டனர்.

மாநாட்டு மேடைக்குப் பின்னால் திருவள்ளுவர், காந்தியார் உருவப் படங்கள் அலங்கரித்து வைக்கப் பட்டிருந்தன.

"துஞ்சினார் செத்தாரின்
வேறு அல்லர்—எஞ்ஞான்றும்
நஞ்சு உண்பார்கள் உண்பவர்"

என்ற குறள் பாட்டும் அதன் மொழி பெயர்ப்பு ஆங்கிலத்திலும் எழுதப்பட்டு படங்களுக்கு இருபுறத்திலும் காட்சி தந்த சூழ்நிலையில, திருமதி எம். எல். வசந்தகுமாரியின் நாட்டுப் பாடலுடன் மாநாடு துவங்கியது.

குடியரசுத் தலைவர், துணைத் தலைமையமைச்சர், மாநில முதலமைச்சர்கள் உள்ளிட்ட பல்வேறு பிரமுகர்களிடமிருந்து வந்திருந்த வாழ்த்துச் செய்திகளை நகர ஷெரிப் நாராயணசாமி படித்தார்.

மாநாட்டில் காமராசர், பக்தவத்சலம், காயிதேமில்லத் முகம்மது இஸ்மாயில் ஆகியோரும் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர்.

மதுவிலக்குச் சரித்திரத்தில் விரமிக்க அத்தியாயம் உருவாக இயலும்!

முதலமைச்சர் அண்ணா அவர்கள், தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மதுவிலக்குச் சட்டம் ஏற்கனவே அமலில் இருந்து ரத்து செய்யப்பட்டுள்ள மாநிலங்களில் மீண்டும் மதுவிலக்குத் திட்டத்தைக் கொண்டுவருவதற்காகக் காமராசரும்—முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலமும்—நானும் சேர்ந்து பிரசாரம் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்பட்டால், 'இதைவிடச் சிறப்பான சந்தர்ப்பம் நம் வாழ்நாளிலேயே கிடைத்ததில்லை' எனக் கருதி மகிழ்வேன்.

"மதுவிலக்கு ரத்து செய்யப்பட்ட மாநிலங்களில் அதுபோன்று பிரசாரம் செய்ய நாங்கள் முற்படுகையில், 'சட்டம்—ஒழுங்கு நிலை மீறப்பட்டது' எனக் கூறி எங்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுச் சிறைக்குச் செல்லும் சூழ்நிலை ஏற்பட்டாலும் ஏற்படலாம்; அத்தகைய சூழ்நிலை மதுவிலக்குச் சரித்திரத்திலேயே மகோன்னதமான அத்தியாயமாக விளங்கும்!

"மதுவிலக்குத் துறையில் சிறப்பாகத் தொண்டாற்றுவதும், உரிய முறையில் பிரச்சாரம் செய்வதும் தேவையாகும்.

"மதுவினால் ஏற்படக்கூடிய கேடுகளை விளக்கவும், சம்பந்தப்பட்ட மக்களுடன் தொடர்பு கொண்டு நல்ல முறையில் அறிவுரைகளைக் கூறவும், மதுவிலக்குச் சட்ட அமுலைத் திறம்பட நடத்தவும் ஏற்படுத்தப்படவிருக்கும் 'உஷார்' படையில் சேர்ந்து தொண்டாற்ற முன்வர வேண்டுமென அனைத்துக் கட்சிப் பிரதிநிதி-களையும் கேட்டுக்கொள்கிறேன்."

'நல்ல பெயரில் ஒரு பகுதி'யை இழந்துவிட்டது மத்திய அரசு; மீண்டும் அதை மீட்டுக்கொள்ள...

மதுவிலக்குத் திட்டத்தை உறுதியுடன் செயலாற்றும் தமிழக அரசுக்கு உதவ முன்வருமா?

"காந்தீயத் தத்துவங்களில் ஒன்றான மதுவிலக்கை—'வருமான நட்டம்' என்ற காரணத்துக்காக—காங்கிரசு அரசுகள் செயல்படும் சில மாநிலங்கள் உட்பட நாட்டின் சில பகுதிகளில் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன; அல்லது அதன் அமுல் விதிகள் தளர்த்தப்பட்டிருக்கின்றன.

"ஆனால், காங்கிரசு அல்லாத அரசு நடைபெறும் தமிழகத்தில்—பலவித பொருளாதார நெருக்கடிகளுக்கிடையிலும்—முழு அளவில் மதுவிலக்கு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

"மக்கள் சமுதாய நலனைக் கருதி மதுவிலக்குக் கொள்கையை உறுதியுடன் பின்பற்றிவரும் தமிழக அரசுக்குப் பொருளாதாரத் துறையில் உதவுவதற்கு மத்திய அரசு முன்வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

"முழு அளவுக்குப் பொருளாதார உதவி செய்ய முடியாமற்போனாலும், குறைந்த அளவில்—'மதுவிலக்கை இன்னும் திறமையாக அமுலாக்குவதற்குத் தேவைப்படும் போலீசுப் படைக்கு ஆகும் செலவு;—விழிப்புடன் கண்காணிப்பதற்குத் தேவைப்படும் 'கண்காணிப்புப் படை'க்கு ஆகும் செலவு' ஆக இரண்டு செலவுகளையேனும் ஏற்றுக்கொள்ளும் அளவில்—மத்திய அரசு பொருளாதார உதவி செய்து, 'நல்ல பெயர்' சம்பாதித்துக் கொள்ளவேண்டும்; தன்னுடைய நன்மையைக் கருதியேனும் மத்திய அரசு, இந்த யோசனையை ஏற்றுக்கொண்டு, அதனைச் செயலாக்குவதற்கு முன்வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

"இப்பிரச்சினையில், 'கெட்ட பெயர்' என்று இல்லாமற்போனாலும், காங்கிரசு ஆளும் மாநிலங்கள் உட்பட மற்ற மாநிலங்கள் மதுவிலக்கைத் தளர்த்தவும், ரத்து செய்யவும் மத்திய அரசு அனுமதித்திருக்கிறது. குறைந்த அளவிலாவது மத்திய அரசு, இத்துறையில் தடுத்தாவது இருந்திருக்க வேண்டும்; மாறாக, அனுமதிக்கவும் செய்திருக்கிறது. இதன் காரணமாக, மத்திய அரசுக்கு இருந்த 'நல்ல பெயரில் ஒரு பகுதி'யை அது (மத்திய அரசு) இழந்துவிட்டது!

"எனவே, மக்களின் வாழ்க்கை நலனுக்காக—அதுபற்றி அரசியல் சட்டத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைப்படி நடந்துவரும் தமிழக அரசுக்கு உதவி செய்ய முன்வருவதன் மூலம், மத்திய அரசு, இழந்துவிட்ட தன்னுடைய நல்ல பெயரை மீட்டுக்கொள்ள இயலும்!

"எங்களுடைய இக்கோரிக்கைக்கு இணங்க மத்திய அரசு முன்வராவிட்டால், அதையே ஒரு காரணமாகக் காட்டி,

'....ஆகவே நாங்கள் மதுவிலக்கை ரத்து செய்கிறோம்'

என்று தமிழக அரசு சொல்லப்போவதில்லை; ஆனால், 'மக்கள் சமுதாயம் வாழ வழி செய்யும் ஒரு கொள்கைக்காக மாநில அரசு போராடிக்கொண்டிருக்கையில், மத்திய அரசு வெறுமனே பார்த்துக்கொண்டிருந்தது' என்ற ஒரு நிலை—'சமஷ்டி சர்க்கார்' என்ற முறையில்—மத்திய அரசுக்கு அவமானத்தைத் தேடித்தரும் என்று எச்சரிக்கிறேன்!"

—முதலமைச்சர் அண்ணா

காங்கிரசு ஆட்சியின் 'மாபெரும் தவறு'கள்!

சட்டத்தையே நம்பியிருந்ததால் ஏற்பட்ட விபரீத விளைவுகள்

காமராசர் சுட்டிக்காட்டுகிறார்

சென்னை, ஏப். 15—

"'பல இடங்களில் காங்கிரசு அமைச்சரவைகள் இருந்தும்கூட, மதுவிலக்குச் சட்டத்தை ஏன் அமுலாக்கவில்லை' என்று, முதலமைச்சர் பேசும்போது கேட்டார்; இது சரியான கேள்வி.

"'மதுவிலக்கு வேண்டும்' என்று தமிழகத்தில், பொதுமக்கள் கருத்து உருவாகியிருக்கிறது; இதுபோல் மற்ற மாநிலங்களில் உருவாகவில்லை.

"சென்ற இருபதாண்டுகளாக இதுபற்றிப் பொதுமக்களிடம் நாம் எடுத்துச் சொல்லவில்லை என்பதை மறந்துவிடக்கூடாது.

"பெரும்பான்மை பலத்தைக் கொண்டு எந்தச் சட்டத்தையும் இயற்றிவிடலாம்; ஆனால், பொதுமக்கள் அவற்றை ஏற்றுக் கொள்ளாவிட்டால் அமுலாக்க முடியாது. 'சட்டமாக ஆக்கிவிட்டால் எதையும் அமுலாக்கிவிட இயலும்' என்று எண்ணிவிட்டோம்; அப்படி எண்ணிவிட்ட காரணத்தினால்தான், மது அருந்துவதன் தீமைகளைப் பற்றி மக்களிடம் எடுத்துச் சொல்லத் தவறிவிட்டோம்!"

இவ்வாறு காமராசர் அவர்கள், அனைத்திந்திய மது விலக்கு மாநாட்டுக் கண்காட்சியை திறந்து வைத்துப் பேசுகையில், காங்கிரசு ஆட்சி செய்துவிட்ட தவறுகளைச் சுட்டிக்காட்டினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

முதலமைச்சருக்கு முழு ஒத்துழைப்பு தருவது அவசியம்

'மதுவிலக்கைத் தீவிரமாக அமுலாக்க வேண்டும்' என்று நமது முதலமைச்சர் நினைக்கிறார். அவருக்கு நமது ஒத்துழைப்பைத் தர வேண்டும்.

மதுவிலக்கைத் தீவிரமாக அமுலாக்குவதற்கு நாம் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகள், மற்றவர்கள் பின்பற்றக் கூடியதாக இருக்கவேண்டும்.

உண்மையான மக்களாட்சி இப்போதுதான் தமிழகத்தில் மலர்ந்துள்ளது

இந்த அரசைக் கவிழ்த்தாலும் மீண்டும் அறிஞர் அண்ணா அவர்களே ஆட்சிக்கு வருவார்

'தீய நோக்குடன் செயல்படும் காங்கிரசாருக்குப் புத்தி தெளியுமா?'—ஆசிய-ஆப்பிரிக்க சட்ட ஆய்வுரைக் குழு உறுப்பினரின் இடித்துரை

"கடந்த இருபது ஆண்டுகளில் இப்போதுதான் முதன் முறையாகப் பொறுப்புள்ள— மக்கள் ஆதரவு நிறைந்த ஓர் அரசு ஏற்பட்டிருப்பதாக விஷயமறிந்த பொது மக்கள் உணர்ந்துள்ளனர்; தமிழ்நாட்டு மக்களின் குன்ருத ஆதரவை இந்த ஆட்சி பெற்றுள்ளது.

"இந்த ஆட்சிக்கு எதிராக மத்திய அரசு நெருக்கடிகளை உருவாக்கி வருகிறது என்பதும், சுப்பிரமணியம் தலைமைதாங்கும் தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டியும் நெருக்கடிகளை உருவாக்கிவருகிறது என்பதையும் பொதுமக்கள் உணர்ந்தே இருக்கிருர்கள்.

"சேத் கோவிந்த தாஸ் போன்ற முட்டாள்தனமான—ஆத்திரமூட்டக்கூடிய வெறிபிடித்த காங்கிரசுக்காரர்களின் அறிக்கைகள், தி.மு.க.-வுக்கு மென்மேலும் மக்கள் பலம் பெருகச் செய்யும். தேர்தல் களத்தில் உடல் முழுவதும் காயம்பட்டுள்ள காங்கிரசு, அவற்றை சாவகாசமாக ஆற்றிக்கொள்ளட்டும்!"

என்று; புதுடில்லியில் உள்ள ஆசிய — ஆப்பிரிக்க சட்ட ஆய்வுரைக் குழுவில் நிபுணராகப் பணியாற்றும் திரு. பி. வேலாயுதம் என்பவர், 'ஹோம் ரூல்' ஆங்கில இதழில் எழுதியுள்ள கட்டுரையில் கருத்தறிவித்திருக்கிருர்; அக்கட்டுரையில் மேலும் அவர் விளக்கியுள்ளதாவது:—

'தமிழகத்தில், சட்டத்தையும் ஒழுங்கையும் காக்கத் தவறிவிட்டது' என்ற காரணம காட்டி, தி. மு. கழக அரசைக் கவிழ்க்க மத்திய அரசு திட்டமிட்டு வருவதுபோலத் தெரிகிறது!

வடக்கத்திய ஆதிக்கத்திற்கு உட்பட்டிருக்கும் காங்கிரசுக் கட்சி, தமிழ் நாடடின் சில பகுதிகளில் தூண்டிவிட்ட மொழிக் கலவரங்களைத் தவிர, தமிழகம் முன் எப்போதையும்விட அமைதியாகவே உள்ளது.

1967 நவம்பர் முதல் 1968 பிப்ரவரிக்குட்பட்ட காலத்தில், நான் மூன்று முறை தமிழகத்துக்குச் சென்றிருந்தபோதும், பெரும்பாலான பிற மாநிலங்களைக் காட்டிலும் தி. மு. கழக ஆட்சியின்கீழ் தமிழகத்தில் மிகவும் அமைதியான சூழ்நிலை நிலவுவதைக் கண்டேன்.

அரசைக் கவிழ்க்க நினைக்கும் எண்ணமே, தீய நோக்குடனும் தவருன ஆலோசனையின்பேரிலும் உருவானது என்பது தெரிகிறது. இதைத் தமிழக மக்கள் கடுமையாக எதிர்ப்பார்கள்!

தென்னக மக்கள் மட்டுமன்றி அனைத்திந்திய மக்கள் அனைவருமே நாட்டின் நிர்வாகம் அரசியல் சட்டத்தின்படி தடையின்றி நடைபெற வேண்டும் என்று விரும்புகிருர்கள்.

காங்கிரசுக் கட்சியின் தலைவர்கள் நிரந்தரமாக ஆட்சியில் இருப்பதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அவை அனைத்தையும் இயன்ற அளவுக்குச் செய்து வந்தார்கள்; ஆனால், பரிதாபகரமாக நான்காவது பொதுத் தேர்தலின் முடிவு அவர்களை நிலைகலங்கச் செய்துவிட்டது!

பல மாநிலங்களில் காங்கிரசின் மோசமான நிர்வாகத்தைக் கண்டு மக்கள் எரிச்சல் கொண்டனர்! அந்த எரிச்சலின் விளைவுதான் தேர்தல் முடிவுகள்!

காங்கிரசுக் கட்சி இப்போது பல்வேறு மாநிலங்களிலும் உள்ள காங்கிரசல்லாத அரசாங்கங்களைக் கவிழ்ப்பதற்கான வழிமுறைகளையும், தந்திரங்களையும் பின்பற்றி வருகிறது.

கூட்டுக் கட்சிகள் சேர்ந்து அரசாங்கம் அமைத்துள்ள மாநிலங்களில், காங்கிரசு மறைமுகமாகத் தலையிட்டுக் குழப்பத்தை உண்டுபண்ணி வருகிறது!

தானே ஆட்சிக்கு வந்துவிட வேண்டும் என்பது அதன் எண்ணம்; அதற்கு, நியாயமாக இம்மாநிலங்களில் மறு தேர்தல் நடத்தி, மக்களின் விருப்பத்தை அறியவேண்டும்!

மேற்கு வங்கம், தகுந்தபாடத்தை அளித்துள்ளது; அதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

தமிழ்நாட்டில் தி. மு. கழகத்துக்கு நிறைந்த ஆதரவு கொடுத்து மக்கள் அதை ஆட்சியில் அமர்த்தியுள்ளனர்.

தமிழக மக்கள், தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியின் மீதும், அதன் இலஞ்ச ஊழலும் திமிரும் பிடித்த தலைவர்கள்மீதும் கொண்டுள்ள வெறுப்பை ஒப்பற்ற முறையில் காட்டிவிட்டார்கள்!

தென்னாட்டைப் பொறுத்தவரையில்—குறிப்பாகத் தமிழகத்தைப் பொறுத்தவரையில்—முன்பிருந்த காங்கிரசு அரசு, அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சி கொள்கைகளை மக்கள் விரும்புகிருர்களோ இல்லையோ—அப்படியே முரட்டுத்தனமாகப் பின்பற்றி, மக்களின் எதிர்ப்பைச் சம்பாதித்துக் கொண்டது!

தமிழ்நாடு காங்கிரசுக்கும்—மக்களுக்கும் இடையே ஏற்பட்ட பிளவு நாளுக்குநாள் பெரிதாகிக் கொண்டே வருகிறது!

'மாநிலத்தில் காங்கிரசு மிகத் திறமையான நிர்வாகத்தை ஏற்படுத்தியது' என்று கூறுவது முட்டாள்தனமாகும்!

தமிழகத்தைப் பொறுத்தவரையில், பிரிட்டிஷ் ஆட்சிக காலத்தில் நிர்வாகம் தூய்மையாகவும், திறமையாகவும், இலஞ்ச ஊழல் இன்றியும் இருந்தது என்று கருதுகிருர்கள்.

காங்கிரசுக் கட்சிதான் போலீசைத் துணைக்கு வைத்துக் கொண்டு கெடுபிடி ஆட்சி நடத்தியது என்று திட்டமாகக் கூறுகிருர்கள்!

காங்கிரசு ஆட்சியின்போது தமிழகம் பஞ்சாபைப் போன்ருே, மற்ற வட இந்திய மாநிலங்களைப் போன்ருே பெரிதாகப் பொருளாதார முன்னேற்றம் அடையவில்லை!

காங்கிரசுக் கட்சி பணம் கொடுத்து ஓட்டு வாங்கி, தனது வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்தது! தவருன போக்கினுல் மக்களின் கழுத்தை நெறித்தது! முழுக்க முழுக்கப் போலீசின் சக்தியை நம்பியே அது ஆட்சி நடத்தியது!

தேவையானல் இராணுவ உதவியும் அளிப்பதாகக் காங்கிரசுக் கட்சிக்கு வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருந்தன!

இதுயோன்ற ஆட்சி முறைகள், பொதுவுடைமை நாட்டிலும், படிக்காதவர்கள் நாட்டிலும் வேண்டுமானல் நடைபெறக் கூடியதாக இருக்கலாம்: ஆனல் நிறைந்த படிப்பும், அறிவு ஆற்றலும் கொண்ட ஒரு மாநிலத்தில் அது நடக்குமா?

தங்கள் உரிமைகளை எப்படி நிலைநாட்டுவது என்பதை மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர்.

வேதனையும் வெறுப்பும் அடைந்திருந்த மக்கள், தி. மு. கழக உதவியையும், தலைமையையும் நாடினர்கள்; அவ்வாறே தி.மு.க.-வும், மக்களைக் காப்பாற்ற வந்துள்ளது.

ஒருகால் தி. மு. கழகத்தையும், திரு. அண்ணுதுரையையும் ஆட்சியிலிருந்து நீக்கிவிட்டால், கூடுதல் வலிமையுடன் தி. மு. கழகத்தையும், அதன் தலைவர் அண்ணுதுரை அவர்களையும்தான், மக்கள், ஆட்சிக்கு அனுப்புவார்கள்!

நாட்டின் ஒருமைப்பாட்டைக் கருதி சி. சுப்பிரமணியமும் அவரது கட்சியும், மக்களுக்கு ஏற்பட்டுள்ள மனக்குறைகளைப் போக்கவும், மொழிப் பிரச்சினையில் நியாயமுறை காணவும் முயலவேண்டும்; அதைவிட்டு, 'ரௌடித்தன'த்திலும், சட்ட விரோதச் செயல்களில் ஈடுபடுவதும், மக்களை மேலும் ஆத்திரம் கொள்ளத்தான் செய்யும்!"

கீழ்நிலை மக்கள் வாழ்க்கையைப் பாழாக்குவதா?

சென்னை, ஏப். 15—

"சுதந்தரம் வருவதற்குமுன், மதுவிலக்கு ஆதரவாளராக இருந்தவர்கள், இப்போது எதிர்ப்பாளராகிவிட்டிருப்பது வேதனைக்குரியதாகுல்;

"ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு நிதி வசதிகள் தேட விரும்புகின்றனர்; சமூகத்தில் கீழ்நிலையில் உள்ளவர்களின் இன்ப வாழ்க்கையை—ஆரோக்கிய வாழ்க்கையைப் பாழாக்கி இதை நாடுகிருர்கள்!

"நிர்வாக நிறுவனம் கண்டிப்பாக நடக்காவிடில், சட்ட மீறலும் ஊழலும் மலிந்துள்ள நிலையில், கள்ள மது காய்ச்சுவது நீடிக்கவே செய்யும்!"

—எல். எம். சிகாந்த்

(மதுவிலக்கு மாநாட்டில்)

காந்தியார் சொன்னது காற்றில் பறக்கவிடப்படுகிறது

பொருளற்ற வாதம் பேசிப் பயனில்லை!

டாக்டர் சுசிலா நய்யார் கடும் கண்டனம்

சென்னை, ஏப். 18—

"காங்கிரசு ஆட்சி நடைபெறும் மாநிலங்களிலும், காங்கிரசல்லாத ஆட்சி நடைபெறும் மாநிலங்களிலும் ஒன்றன்பின் ஒன்ருக மதுவிலக்குத் தளர்ந்துகொண்டிருக்கிறது; அல்லது அடியோடு ரத்து செய்யப்பட்டு வருகிறது; 'பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கும், வருமானத்தைப் பெருக்குவதற்கும் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது' எனக் காரணம் கூறப்படுகிறது; இந்தப் போக்கு எனக்கு மன வேதனையைத் தந்திருக்கிறது!

"மதுவிலக்கை அமல் நடத்தும் திட்டத்திற்குக் காந்தியார் மிக முக்கியத்துவம் அளித்துவந்தார்; ஆனல் அந்தக் கொள்கை இப்பொழுது காற்றில் பறக்கவிடப்படுகிறது! வருமானத்தைப் பெருக்க வேண்டியிருப்பதாலும், கள்ளச் சாராயம் காய்ச்சுவதைத் தடுப்பது கடினமாக இருப்பதாலும் இந்த நடவடிக்கை எடுப்பதாகக் கூறப்படுகிறது; இந்த வாதங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கவை அல்ல!

"மதுவிலக்குக்கும் — கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்கும் இடையே எவ்வித நேரடித் தொடர்பும் இல்லை. மதுவிலக்கைச் செயல்படுத்தும் அதிகாரிகளின் ஊழலாலும், உடைந்தையான போக்கினுலும்தான் அத்தியத் தொழில் வளருகிறது! செயல்படுத்தும் இயந்திரத்தை மேம்படுத்துவதை விடுத்து, மதுவிலக்கையே ரத்து செய்துவிடவேண்டும் என்று பேசுவதில் பொருள் இல்லை! எனவே, இலஞ்ச ஊழல்கள் தடுக்கவும், ஆட்சி இயந்திரம் திறம்படவும் நாணயமாகவும் இயங்க வழி காண்பதும்தான் முக்கியம். மதுவிலக்கை ரத்து செய்வதால் இந்த வகையில் ஒரு பயனும் ஏற்படாது.

"'யாரும் குடிக்கலாம்' என்ற நிலை ஏற்பட்டால் நிலைமை இன்னும் மோசமாகிவிடும்; இதற்கு மாருக 'அரசு, ஊழியர்கள் யாரும குடிக்கக்கூடாது' என்று கண்டிப்பாக உத்தரவிட்டால் நிலைமை எவ்வளவோ மேம்படும்!

"கௌடில்யர் கி.மு. நான்காம் நூற்ருண்டில், அரசு ஊழியர்கள் மது அருந்துவதற்கே தடை விதித்திருக்கிருர்; 'இராணுவ முகாம்களில் குடிப் பழக்கம் ஒழுங்கீனத்துக்கு வழிவகுக்கும்' என்ற கருத்தில், அந்த முகாம்களிலும் குடிப் பழக்கத்துக்கும் அவர் தடை விதித்தார். இன்றையநாளில் அந்த அருங் கொள்கையை இன்னும் சிறந்த முறையில் பின்பற்ற வேண்டியது அவசியமாகும்"

என்று, நான்காவது அனைத்திந்திய மதுவிலக்கு மாநாட்டிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் டாக்டர் சுசிலா நய்யார் சுட்டிக்காட்டி வலியுறுத்தினர். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

நிர்ப்பந்த நிலையிலும் தமிழக முதலமைச்சர் கடமையாற்றுகிருர்!

"மதுவிலக்குக் கொள்கையைத் தமிழக முதலமைச்சர், எவ்வளவோ நிர்ப்பந்தங்களுக்கிடையிலும் அமல் நடத்த உறுதிகொண்டிருப்பதைப் பாராட்டுவதற்கு அறிகுறியாகவே இம்மாநாட்டை இம் மாநிலத்தில கூட்டியிருக்கிருேம்.

"'முக்கியமானவர்களைக் கொண்டு சென்னையில் இம் மாநாட்டைக் கூட்டி, அதில் முதலமைச்சர் அண்ணுதுரையைப் பேசச் சொல்லவேண்டும்; மதுவிலக்குச் சம்பந்தமாகத் தமிழகத்தின் அனுபவங்களை அவர் சொல்லவேண்டும்' என்று காமராசர் யோசனை கூறினர்; இராஜாஜியை நான் சந்தித்தபோதும், இதே யோசனையைத்தான் அவரும் வலியுறுத்திக் கூறினர்.

"சென்னையில் மதுவிலக்கு மாநாடு நடைபெறுவதற்கும்—துவக்கிவைக்கவும் தமிழக முதலமைச்சர் ஒப்புக்கொண்டது பெருமைக்குரியதாகும்.

கடமையை நிறைவேற்றியதா மத்திய அரசு?

"பத்து ஆண்டுகளுக்குமுன்பு முழு மதுவிலக்கை அமல் நடத்த வேண்டும் என்று தேக்சந்த் குழு சிபாரிசு செய்தது; அதை எப்படி நடத்துவது என்பதற்கு யோசனைகளையும் குழு தெரிவித்திருந்தது. குழுவின் அறிக்கை அரசுக்கு அளிக்கப்பட்டு நான்கு ஆண்டுகளாகின்றன; ஆனல் இன்னும் அறிக்கைமீது மத்திய அரசு முடிவு எடுக்கவில்லை.

"மதுவிலக்குக் கொள்கையை மத்திய அரசு ஏற்றுக்கொண்டுவிட்டதாகவும், ஆனல் அதை அமல் நடத்தும் பொறுப்பு மாநில அரசுகளிடமே இருப்பதாகவும் நாடாளுமன்றத்தில் உள்துறை அமைச்சர் கூறினர்; அவருடைய அறிக்கை மனநிறைவு தருவதாக இல்லை.

"மதுவிலக்கு அரசியல் சட்டத்தின் கட்டளைக் கொள்கைகளில் வற்புறுத்தப்பட்டுள்ளது; ஆகவே இந்தக் கட்டளைக் கொள்கைகளை மாநில அரசுகளை அமல் நடத்தும்படி பார்த்துக்கொள்வது மத்திய அரசின் கடமையாகும்.

வழிகாட்டும் கொள்கை கேலிக்குரியதாகிறது!

"மகாராட்டிர காங்கிரசுக் கட்சி, ஐந்து சதவிகித மதுசார பானங்களைத் தாராளமாக விற்பதென்ற முடிவை ஒருமனதாக மேற்கொண்டிருக்கிறது. இந்த முடிவின்மூலம், காந்தியார் நூற்ருண்டு விழாவும், அரசியலமைப்பின் வழிகாட்டிக் கொள்கைகளும் கேலிக்குரியதாக ஆக்கப்பட்டிருக்கின்றன!

"குடிப் பழக்கத்தினுல் அந்த நபர் மட்டுமல்ல—அவருடைய குடும்பமே துன்பமடைகிறது! சமுதாயம் முழுவதுமே துன்புறுகிறது!

"எனவே, 'தனிப்பட்டவர் சுதந்தரம்' என்பதன்பெயரால், இவ்விதப் போக்கினை, எவ்விதத்திலும் அனுமதிக்க முடியாது!"

பணப் பிரச்சினையாக நினைத்தால் ஏமாறத்தான்வேண்டும்

மதுவிலக்கைத் தளர்த்துவதன் மூலமும், ரத்து செய்துவிடுவதன் மூலமும் அரசுக்குப் பெரும் அளவில் வருமானம் வந்துவிடாது!

இன்றுள்ள நிலையில், மதுவிலக்கு என்பது பணப் பிரச்சினையல்ல; அப்படி நினைத்தால் ஏமாறத் தான் வேண்டும்.

சமுதாயத்திற்குப் பெருங்கேடு விளைவிப்பது மது! அதை, பணப் பிரச்சினையாக ஆக்கிக் கொள்ளக் கூடாது!"

—காமராசர்

(மதுவிலக்கு மாநாட்டில்)

பாமர மக்களை ஏமாற்றிக் கொள்ளையடிப்பதா?

மதுக் கடையுடன் சேர்த்து மக்களையும் விற்காதீர்!

பேராசை பிடித்த அரசுகளின் செயலுக்கு இராஜாஜி கண்டனம்

சென்னை, ஏப், 14—

மதுவிலக்கைத் தமிழகத்தில் நடைமுறைக்குக் கொண்டுவந்த போது, அதனால் ஏற்படக்கூடிய வருவாய் நட்டத்தை ஈடுசெய்ய 'விற்பனை வரி' என்ற 'காமதேனு'வைத் தாம் அளித்தது பற்றிக் குறிப்பிட்டு நான்காவது அனைத்திந்திய மதுவிலக்கு மாநாட்டில் பேசுகையில் இராஜாஜி கூறியதாவது :—

"இந்தக் 'காமதேனு'வை எவ வாறு அமுல் செய்யவேண்டும் என்பதற்கான வழிவகைகளை வகுத்துத் தந்தேன்; இப்போது, பிற மாநிலங்கள் அந்தக் 'காமதேனு'வையும் பிடித்துக்கொண்டதுடன், பணப் பேராசையின் காரணமாக மதுவிலக்கையும் ரத்து செய்திருக்கின்றன.

தனி மனுதனுக்குப் பேராசை வந்தால் அதைக் கட்டுப்படுத்தி விடலாம்; ஆனால், அரசுகளுக்குப் பேராசை வந்தால் கட்டுப் படுத்துவது கடினமானதாகும்.

விலங்குகளுக்கு இல்லாத ஒன்றே ஒன்று மனிதனுக்கு இருக்கிறது; அதுதான் பகுத்தறிவு; அதைத்தான், மதுவிலக்கை ரத்து செய்துவிட்ட மாநில அரசுகள், மது கொடுத்துப் 'போதை' ஏற்றிப் பறித்துவிடும் செயலில் ஈடுபட்டிருக்கின்றன!

இச்செயல், அவனிடமிருக்கும் பணத்தைக் கொள்ளையடிப்பது போன்றதாகும்! பாமர மனிதனை ஏமாற்றி அவனுடைய பணத்தைத் 'திருடுவது' மாதிரியாகும்!

'கொள்ளையடிப்பது' என்றால் என்ன என்பது நமக்குத் தெரியும்; ஆனால் இத்தகைய 'கொள்ளை'கள், கொள்ளைக்காரர்களுக்குக்கூடத் தெரியாது!

இம்மாதிரி பணம் பறிப்பது, மனிதனை மனிதன் தின்பதற்கு ஒப்பானதாகும்!

ஏழை — எளிய — பாமர மக்கள் வாழும் பகுதிகளில் கள்ளுக் கடைகளை ஏலம் விடுவார்கள்; அதன்மூலம் அரசுக்கு அதிகப் பணம் கிடைக்கும்; அதே சமயத்தில், அங்குள்ள குடும்பங்களில் நாசகர விளைவுகள் ஏற்படும்.

இத்தகைய முறையில் அரசுக்குக் கிடைக்கும் வரி, நேர்முகவரியா—மறைமுக வரியா? எதிலும் சேராதது இது! ஆனால், ஏழை—பாமர மக்களின் பேதமையின்மீது நடத்தப்படுகின்ற மோசடியாகும்! குடிப்பதற்கு அப்பாமரன் ஆசை காட்டப்படுகிறான்—அதன் மூலம் அவனிடமிருந்து பணம் பறிக்கப்படுகிறது!"

"காங்கிரசுக்காரர்கள் என்னுடைய புத்திமதியை ஏற்றுக் கொண்டு, இப்போது மதுவிலக்கை ரத்து செய்துள்ள மாநிலங்களில் மீண்டும் மதுவிலக்கை அமுல் நடத்த முன்வர வேண்டும்" எனக் கேட்டுக் கொள்கையில் இராஜாஜி அவர்கள் சுட்டிக் காட்டியதாவது:—

"விற்பனை வரியில் என்ன மாற்றங்களை வேண்டுமானாலும் செய்துகொள்ளுங்கள்; ஆனால், மனிதனைக் குடிக்கச் செய்து அதன்மூலம் பணம் ஈட்ட முனையாதீர்!

"குடும்பத் தலைவன் சம்பாதித்து வாழ வேண்டியுள்ள தாய்மார்கள்—அவர்களின் குழந்தைகள் பெற வேண்டிய பணத்தை அரசு பறிப்பதானால், அப்பணம் 'பாவம்' நிறைந்ததாகும்!"

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

அந்நியராட்சியினும் அக்கிரமச் செயல்

'அதிகார போதை' பற்றி ஆச்சாரியா கிருபளானி

"'மதுவிலக்கு அமுலினால் வருவாய்த் துறையில் நட்டம் ஏற்படுகிறது' என்று கூறுபவர்கள் தான், காந்தியைப் பற்றி நிறையப் பேசுகிறார்கள்!

"அவர் தந்துவிட்டுச் சென்ற படிப்பினையை மறந்துவிட்டு அப்படிப் பேசுபவர்களுக்குக் 'குடி போதை' இல்லாவிட்டாலும் 'அதிகார போதை' இருக்கிறது; இது, குடிபோதையைவிட மோசமானது!

"சொந்த அரசு எதேச்சாதிகார அரசாக மாறினால், அதன் அக்கிரமத்தன்மை, அந்நியராட்சியைவிட மோசமானதாகும்!"

பாசாங்குக்காரர்களை எப்படி எழுப்புவது?

ஆர். ஆர். திவாகர் கண்டனம்

"வாழ்க்கை நல அரசுகள் என்று தங்களைச் சொல்லிக்கொண்டு அதற்கு விரோதமான போக்கில் (மதுவிலக்கை ரத்து செய்வதன் மூலம்) சில மாநில அரசுகள் நடந்துகொண்டு வருகின்றன; இது குறித்து வருந்துகிறேன்.

"தூங்குகிறவர்களை எழுப்ப முடியும்; ஆனால், தூங்குகிறவர்களைப்போல் பாசாங்கு செய்பவர்களை எப்படி எழுப்புவது?"

அமைச்சர்

செ. மாதவன்

சுற்றுப்பயணம்

ஏப். 17 காலை 10 மணி: வேலஞ்சேரி - பள்ளிக் கட்டிடத் திறப்பு; 12 மணி: கார்த்திகேயகுப்பம்—உயர்நிலைத் தண்ணீர்த் தொட்டித் திறப்பு; மாலை 4 மணி—பழையனூர் பள்ளிக் கட்டிடத் திறப்பு; அரிசன காலனியில் உயர்நிலைத் தண்ணீர்த் தொட்டித் திறப்பு; மாலை 5-30 மணி: திருவாலங்காடு—பள்ளிக் கட்டிடத் திறப்பு; வேளாண்மைக் கிடங்குத் திறப்பு; ஊராட்சி ஒன்றிய வரவேற்பு.

அண்ணா அமெரிக்கப் பயணம்

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஆனால், அமெரிக்காவிலும், மற்ற நாடுகளிலும் எனது சுற்றுப்பயணத்தின்போது நாட்டின் முன்னேற்றத்திற்கும், சமுதாய ஏற்றத்திற்கும் பயன்படக் கூடியவற்றை நடைமுறைக்குக் கொண்டுவர முயற்சிசெய்வேன்.

ஒரு மாத காலம் நான் உங்களை விட்டு வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தில் இருந்தாலும், ஒவ்வொரு நாளும் நீங்கள் எல்லாரும் எனது அருகில் இருப்பதாகவே எண்ணி உற்சாகமாகச் சுற்றுப்பயணத்தை நிறைவேற்றுவேன்.

நெல், அரிசி போக்குவரத்து

தமிழக அரசின் புதிய ஆணை

சென்னை, ஏப். 14—

'சென்னை—நெல்; அரிசி போக்குவரத்துக் கட்டுப்பாடு உத்தரவு' என்னும் ஒரு புதிய உத்தரவை, தமிழக அரசு பிறப்பித்திருக்கிறது.

1966-ம் ஆண்டு உத்தரவு ரத்துச் செய்யப்படுகிறது; புதிய உத்தரவு உடனடியாக அமுலுக்கு வருகிறது.

நெல், அரிசி விநியோகிப்பதை ஒழுங்குப்படுத்தவும், அனைவருக்கும் அவை சமமாக விநியோகமாகவும், நியாயமான விலைக்குக் கிடைக்கச் செய்யவுமே இந்த உத்தரவு மாநில முழுவதும் அமுலாக்கப்படுகிறது.

"கைப்பற்றப்பட்ட நெல் அல்லது அரிசிக்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இரசிது தரவேண்டும்" என்று உத்தரவு கூறுகிறது.

"ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்துக்கோ, ஒரு மாவட்டத்தில் அறிவிப்புச் செய்யப்பட்ட ஒரு பகுதியில் இருந்து அதே மாவட்டத்தில் மற்றொரு பகுதிக்கோ, மாநில அரசினராலோ அல்லது உரிய அதிகாரம் பெற்றுள்ள அதிகாரிகளாலோ அளிக்கப்பட்ட 'பெர்மிட்டு'கள் இன்றி 10 லிட்டருக்கு அதிகமான நெல் அல்லது அரிசி கொண்டுபோகக் கூடாது" என்று புதிய உத்தரவு கூறுகிறது.

தஞ்சையில் கி. உ. மாநாடு

அமைச்சர் கே. ஏ. மதியழகன் கலந்துகொள்கிறார்

தமிழக கிராம உத்தியோகஸ்தர்கள் மாநாடு, 17—4—68 காலை 8½ மணிக்கு தஞ்சை அரண்மனை சங்கீத மகாலில் நடைபெறும்; திரு. டி. சீனிவாச கவுண்டர் தலைமை தாங்குவார்; வருவாய்த் துறை அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள், மாநாட்டைத் துவக்கிவைப்பார்கள்; மாவட்ட ஆட்சியாளர் திரு. சி. ஜி. ரங்கபாஷ்யம் ஐ.ஏ.எஸ். சொற்பொழிவாற்றுவார்; நாடாளுமன்ற—சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்துகொள்கிறார்கள்.

சிக்கிம் -- பூட்டான் எல்லையில் சீனர்கள்

சாலையமைப்பு வேலையில் தீவிரம்

காங்டாக், ஏப். 11—

சிக்கிம் - பூட்டான் எல்லையோரத்தில் சாலைகள் அமைப்பதிலும், இராணுவ முகாம்களை ஏற்படுத்துவதிலும் சீனர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

லாசா நெடுஞ்சாலையுடன் இணையும் வகையில் சிக்கிமுக்கும் — மேற்கு பூட்டானுக்கும் செல்லும் சாலைகளைச் செம்மைப்படுத்திவருகிறார்கள்.

நாதுலா, ஜிலிப்லா, கம்பாலா ஆகிய இடங்களை இணைக்கும் சாலை ஒன்றை அமைத்து, பூட்டான் எல்லையில் உள்ள முக்கிய இடங்களுக்குச் செல்லும் வசதிகளைச் செய்து வருகின்றனராம்.

வருந்துகிறோம்

முன்னாள் சென்னை மேயரும், நாடாளுமன்றக் கழக உறுப்பினருமான தோழர் குசேலர் அவர்களின் தந்தையார் திரு. கோபாலசாமி, இன்று காலை தமது 96-வது வயதில் இயற்கையெய்தினார் என்ற செய்தி வருத்தத்துடன் அறிவிக்கப்படுகிறது; இன்று மாலை 7-மணிக்கு மூலக்கொத்தளம் இடுகாட்டில் உடல் அடக்கம் செய்யப்படும்.

தந்தையாரைப் பிரிந்து துயருறும் தோழர் குசேலருக்கும், அவர்தம் குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த பரிவும் ஆறுதலும் உரித்தாகுக. (ஆ—ர்)

மதுவிலக்கு—ஒரு வாழ்க்கை முறை!

"மதுவிலக்கு ஒரு வாழ்க்கை முறை; அந்தக் கொள்கையை நாங்கள் ஏற்றுக் கொண்டுவிட்டோம்; மாநில அரசின் அமைப்பு எவ்வாறு இருந்தாலும், மதுவிலக்குக் கொள்கை தொடர்ந்து அமுலாக்கப்படும்.

"மதுவிலக்கு இல்லையேல், அரிசனங்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் விமோசனமில்லை!

"சென்னையில் ஒரு பரம்பரையைச் சேர்ந்தவர்களுக்கு மதுவைப் பற்றி ஒன்றுமே தெரியாது! குடித்துவிட்டு வீதிகளில் ரகளை செய்யும் காட்சிகளையும் அவர்கள் கண்டதில்லை!"

--முதலமைச்சர் அண்ணா

(மதுவிலக்கு மாநாட்டு வரவேற்புக் குழுக் கூட்டத்தில் கூறியதாக சுசிலா நய்யார் தகவல்)

நடக்க இருப்பவை

17--4--68

காரைக்குடி

நகர தி. மு. க. சார்பில் பாராட்டு விழா; மாலை 7.மணிக்கு டாக்சி நிலையம் அருகில்; தலைவர்: பி. முத்துராமன்; பாராட்டுப் பெறுவோர்: பி. ஞானசம்பந்தம் எம்.எல்.சி., வி. தங்கபாண்டியன் பி.ஏ.பி.டி., எம்.எல்.சி.; பாராட்டுரை வழங்குவோர்: அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, எஸ். எஸ். தென்னரசு, சி. சேதுராமன் எம்.எல்.ஏ., உ. பில்லப்பன் எம்.ஏ. பி.எல். பெரி. அழகு, சித. சிதம்பரம்.

திருத்தங்கல்

கலைஞர் கருணாநிதி மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு பன்னீர்செல்வம் திடலில்; தலைவர்: எப். எம். சூசை; பேசுவோர்: இரா. பொற்கொண்டான், இரா. பொன்னுபாண்டியன், ஓ. வி. ஐயனார், ஏ. எஸ். கனி, எம். லூர்துசாமி, டேவிட் இரத்தினம், எஸ். சுப்பிரமணியம், ஏ. பி. நாதன்.

பொதுப் பணித்துறை அமைச்சர் கருணாநிதி வீட்டுத் திருமணம்

சென்னை, ஏப். 13—

பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் வீட்டுத் திருமணங்கள், நேற்று மாலை மிகச் சிறப்பான முறையில் நடந்தேறின.

அமைச்சர் கருணாநிதியின் மகன் முத்துவேலுவுக்கும்—இசைச் சித்தர் சிதம்பரம் செயராமன் மகள் சிவகாமசுந்தரிக்கும்; அமைச்சர் கருணாநிதியின் மருமகன் செல்வத்துக்கும்—மகள் செல்விக்கும் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமை தாங்கி மணவிழாவினை நடத்தி வைத்தார்கள்.

சென்னை ஆபட்சுபரி மாளிகையில் நடைபெற்ற இந்தத் திருமணத்திற்கு, பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும், நகரப் பிரமுகர்களும், கலைத் துறையினரும், கழக முன்னணித் தோழர்களும் ஆயிரக்கணக்கில் வந்து குழுமியிருந்தனர்.

வந்திருந்த அனைவரையும் அமைச்சர் கருணாநிதி அவர்கள் வரவேற்று, அறிஞர் அண்ணா அவர்களைத் தலைமைதாங்கித் திருமணங்களை நடத்தித் தருமாறு கேட்டுக்கொண்டார்; அதனை, சிதம்பரம் செயராமன் அவர்கள் வழிமொழிந்தார்.

அண்ணா அவர்கள், திருமணங்களை நடத்திவைத்து மணமக்களை வாழ்த்திய பின், தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் வாழ்த்துக் கூறினார்.

அடுத்து மணமக்களை வாழ்த்தி முறையே அமைச்சர் இரா.நெடுஞ்செழியன், பேராசிரியர் க. அன்பழகன், இராஜாஜி, டி. செங்கல்வராயன், காயிதேமில்லத்இஸ்மாயில் சாகிப், ம. பொ. சிவஞானம், பி. ஜி. கருத்திருமன், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன், சி. பா. ஆதித்தனார், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, அமைச்சர் சத்தியவாணி முத்து, அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன், திருமதி சௌந்திரா கைலாசம், செட்டிநாட்டரசர் முத்தையா செட்டியார் ஆகியோர் பேசியபின், பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இறுதியாக, முரசொலி மாறன் அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

மணவிழா முடிந்ததும், திருமதி எம். எஸ். சுப்புலட்சுமியின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

அடுத்து திருமதி பத்மினி குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.

மணவிழாவில் கலந்துகொள்ள இயலாமையைத் தெரிவித்து மணமக்களுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியோரில் குறிப்பிடத்தக்கவர்கள்:—

குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன், துணைக் குடியரசுத் தலைவர் வி.வி. கிரி, தலைமையமைச்சர் இந்திரா காந்தி: டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன், மக்களவைத் தலைவர் சஞ்சீவி ரெட்டி, ஆந்திர முதலமைச்சர் பிரும்மானந்த ரெட்டி, கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடு, திட்டக் குழு உறுப்பினர் ஆர். வெங்கட்ராமன, மராட்டிய கவர்னர் டாக்டர் பி. வி. செரியன், மத்திய அமைச்சர்வி.கே.ஆர். வி.ராவ், துணையமைச்சர் கே. எஸ். இராமசாமி மைசூர் பொதுப் பணியமைச்சர் வீரேந்திர பட்டீல், காமராசர், ஆர்ச் பிஷப் அருளப்பா, உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி எம். அனந்தநாராயணன், மேலவைத் தலைவர் மாணிக்கவேலர், இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர், வங்கத் தமிழர் சங்கம்.

★

என். வி. என். வீட்டுத் திருமணம்

அறிஞர் அண்ணா தலைமையில் நடைபெற்றது

சென்னை, ஏப். 15—

கழக அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்களின் அண்ணார் திரு. திரு. என். வி. கதிர்வேலு அவர்களின் மகள் அறிவழகிக்கும்—டாக்டர் வடிவேலு அவர்களின் மகன் பாலகிருட்டினனுக்கும், நேற்று காலை, தங்கசாலைத் தெரு கீவ்ராஜ் திருமண மண்டபத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.

என். வி. என். அவர்கள் அனைவரையும் வரவேற்று, அண்ணா அவர்களைத் தலைமைதாங்கி திருமணத்தை நடத்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொண்டார்: அதனை, டாக்டர் வடிவேலு வழிமொழிந்தார்.

அண்ணா அவர்கள் தலைமையேற்று மண விழாவினை முடித்து வைத்து மணமக்களுக்கு வாழத்துரை வழங்கினார்கள்.

அடுத்து மணமக்களை வாழ்த்தி அமைச்சர்கள் நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன், ஏ. கோவிந்தசாமி, சத்தியவாணி முத்து, மா. முத்துசாமி, சாதிக் பாட்சா, தோழர்கள் இராம. அரங்கண்ணல் எம.எல்.ஏ., இரா. செழியன் எம்.பி., ஏ. பி. சனார்த்தனம் எம்.ஏ., இளமுருகு பொற்செல்வி, திருமதி பொற்செல்வி இளமுருகு, அட்வகேட்-ஜெனரல் கே. நாராயணசாமி, வேலூர் நாராயணன், புருஷோத்தமன், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, மாணவர் சனார்த்தனம், மற்றும் பலர் பேசினர்.

என். வி. என். சோமு நன்றி கூற, விழா இனிது முடிவுற்றது.